இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 342 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 06 – செவ்வாய்க்கிழமை 22 ஜுலை 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 342 : Thiruvalluvar Year - 2056 - Aadi 06 - Tuesday 22 July 2025 - Madurai 12 Pages ₹ 5.00


## பஹல்காம் தாக்குதல் – கீழடி ஆய்வறிக்கை பிரச்சினை! முதல் நாளிலேயே

# நாடாளுமன்ற இரு அவைகளும் முடக்கம்!




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (21.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அ.தி.மு.க. அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அன்வர் ராஜா அவர்கள் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார். உடன் கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா தி.மு.க.வில் இணைந்தார்!

### “பா.ஜ.க.விடம் அ.தி.மு.க. சிக்கிக் கொண்டது” என பேட்டி!

சென்னை, ஜுலை 22 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அ.தி. மு.க. முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, தி.மு.க.வில் இணைந்தார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அன்வர் ராஜா சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார்.

இந்நிகழ்வின் போது, அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ராஜ கண்ணப்பன், பி.கே. சேகர் பாபு, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராம லிங்கம், தி.மு.க. செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அன்வர் ராஜா, தனது கொள்கையிலிருந்து தடம்புரண்டுவிட்ட அ.தி.மு.க., தற்போது பா.ஜ.க.விடம் சிக்கிக்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். அ.தி.மு.க.வை அழிப்பதுதான் பா.ஜ.க.வின் நோக்கம் என்றும் கூறினார்.

தொடர்ந்து பேசிய அன்வர் ராஜா, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இணையான தலைவர் யாரும் தமிழ்நாட்டில் இல்லை என்றும் அவரே மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வேண்டும் என்பதே மக்களின் விருப்பம் என்றும் அன்வர் ராஜா கூறினார்.

பா.ஜ.க.வை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மாநில உரிமைக்காக போராடுகின்ற இயக்கம் தி.மு.க. தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக முன்னேறியிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எனவும் அன்வர் ராஜா தெரிவித்தார்.

## எதிர்க்கட்சிகளுக்குப் பேச அனுமதி மறுப்பு! வெளிநடப்பு!

**புதுடெல்லி, ஜுலை 22 -**

**பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியதால், நாடாளுமன்ற இரு அவைகளும் முதல்நாளிலேயே முடங்கின.**

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. மக்களவை தொடங்கியதும், பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். ஆனால், சபாநாயகர் ஓம் பிர்லா அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவையின் மையப் பகுதிக்குச் சென்று தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் முழக்கங்களை எழுப்பினர். இதனால், அவையை நண்பகல் 12மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

மக்களவை மீண்டும் கூடியதும், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர். ஆனால், சபாநாயகர் தனது நிலையில் விடாப்பிடியாக இருந்தார். இதனைத் தொடர்ந்து அவையில் அமளி நிலவியது. பின்னர், அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதேபோல் மாநிலங்களவை தொடங்கியதும், அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு, பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தினார்.

இதுகுறித்து மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டதாவது:-

பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க வேண்டும் ஏப்ரல் 22ல் நடந்த பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க நோட்டீஸ் அளித்திருந்தோம்.

இதுவரை கொலையாளிகள் பிடிபடவில்லை. அரசின் நடவடிக்கைக்கும் ராணுவத்திற்கும் அனைவரும் ஒருமித்த ஆதரவை அளித்தோம் இதுவரை எந்த விவரத்தையும் அரசு வெளியிடவில்லை. நாட்டுக்கு முழு விவரங்களையும் அரசு தெரிவிக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து கீழடி ஆய்வறிக்கைக்கு ஒப்புதல் அளிப்பதில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தாமதம் செய்துவது குறித்து விவாதிக்க வேண்டும் என மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா கோரினார். ஆனால் இக்கோரிக்கைகளை ஏற்க அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர் மறுத்துவிட்டார். இதனால், அவையில் குழப்பம் நிலவியது. இதனைத் தொடர்ந்து அவை நண்பல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### வெளிநடப்பு!

மாநிலங்களவை 12 மணிக்கு மீண்டும் கூடியதும், பஹல்காம் தாக்குதல், கீழடி ஆய்வறிக்கை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து குரல் எழுப்பினர். இதற்கு அனுமதி அளிக்கப்படாததால், காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

### ராகுல் காந்தி

மக்களவை ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி அவர்கள், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச தொடர்ந்து அனுமதி மறுக்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

### எதிர்க்கட்சிகளின் உரிமை மறுக்கப்படுகிறது!

அவையில் அமைச்சர்கள் பேச அனுமதிக்கப்படுகிறது. பா.ஜ.க.வினர் பேச அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிகள் பேச விரும்பினால் அனுமதி மறுக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் பேச எனக்கு உரிமை உள்ளது. ஆனால் அனுமதி மறுக்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் அணுகுமுறை புதுவிதமாக உள்ளது எதிர்க்கட்சிகளை பேச அனுமதிக்க வேண்டும் என்பது அவையின் மரபாகும். ஆனால் வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்று ராகுல் காந்தி பேட்டியளித்தார்.

### கிராமப்புற மாணவர்கள் மிகப்பெரிய பதவியை அடைந்திட

## ‘நான் முதல்வன்’ திட்டம் மிகச் சிறந்த திட்டமாகும்!

### ஐ.ஏ.எஸ். தேர்வில் வென்ற திருச்சுழி தொகுதி மாணவர் நம்பிக்கை!

திருச்சுழி, ஜுலை 22 -

கிராமப்புற மாணவர்கள் ‘நான் முதல்வன்’ திட்டம் மூலமாக மிகப் பெரிய பதவியை அடைய முடியும் என்று, ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்ற திருச்சுழி மாணவர் தெரிவித்தார். திருச்சுழி அருகே மண்டப சாலை கிராமத்தைச் சேர்ந்த டெய்லர் சுப்புராஜ். இவரது மகன் சங்கர்பாண்டியராஜ். சென்னையில் பள்ளிக் கல்வித்துறை அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றுகிறார்.

தற்போது நான் முதல்வன் திட்டத்தில் படித்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட பணிகளுக்கான யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்ற இவர், அகில இந்திய அளவில் 807வது ரேங்க் இடம் பெற்று சாதனை படைத்துள்ளார். இந்நிலையில் அவர் படித்த எம்.ரெட்டியபட்டி அரசுப்பள்ளி மற்றும் தும்முசின்னம்பட்டி அரசுப்பள்ளிக்கு நேரில் சென்று தனக்கு கல்வி கற்று கொடுத்த ஆசிரியர்களிடம் கலந்துரையாடினார்.

சாதனை படைத்த மாணவர் சங்கர் பாண்டியராஜுக்கு தும்மு சின்னம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை கீதா ராணி மாலை, சால்வை அணிவித்து புத்தகத்தை பரிசாக வழங்கினார்.

நிகழ்ச்சியில் சங்கர் பாண்டியராஜ் பேசுகையில், “திருச்சுழி அருகே எம்.ரெட்டியபட்டியில் அரசு பள்ளியில் தான் படித்தேன். பின்னர் தொலைதூர கல்வி படித்து, சென்னையில் கேட்டரிங் சர்வீஸில் பணி, மாணவர்களுக்கு டியூஷன் என பணியாற்றி, ஏழு முறை யுபிஎஸ்சி தேர்வெழுதி தோல்வியை கண்டேன். அதிலும் சோர்ந்து விடாமல் தமிழக அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.7500 கிடைத்ததால் வேலைக்குக் கூட செல்லாமல் படித்தேன்.

சென்னை அண்ணா நூலகம், மதுரை கலைஞர் நூலகத்திலும் புத்தகங்களை படித்தேன். யுபிஎஸ்சி தேர்வுக்கு தயாரானது, எழுதியது, நேர்முகத் தேர்வு என அனைத்தையும் தமிழிலேயே படித்து வெற்றி பெற்றேன். எனது ரேங்கிற்கு ஐஆர்எஸ் ஆக வாய்ப்புள்ளது. தொடர்ந்து படித்து ஐ.ஏ.எஸ். கனவை நிறைவேற்றுவேன்.

கிராமப்புற மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டம் மூலமாக மிகப்பெரிய பதவியை அடைய முடியும் என்பதற்கு நானே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளேன். இந்த யுபிஎஸ்சி தேர்வு எழுதும் அனைவருக்கும் நான் முதல்வன் திட்டம் பயனுள்ளதாக உள்ளது.

கிராமப்புறத்தில் இருக்கிறோம் என்ற காரணத்தினால் படிக்காமல் இருக்கக் கூடாது. படிப்பதில் முயற்சி செய்ய வேண்டும். அரசு நமக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து கொடுக்கிறது.

சமூக வலைதளங்களில் வரும் தகவல்கள் 99% பொய்யாகவே உள்ளது. மேலும் இவை அனைத்தும் மாணவர்களை தவறான பாதையில் வழி நடத்தி வருகிறது. மாணவர்கள் சரியான வழியில் செல்ல வேண்டும் என்றால் ஆயிரம் புத்தகங்களுக்கு சமமான ஆசிரியர்கள் சொல்வதை கேட்க வேண்டும். தினசரி நாளிதழ்கள் படிக்க வேண்டும், அப்போது தான் அறிவு சார்ந்த தகவல்களை வளர்க்க முடியும். சமூக வலை தளங்களில் செலவிடும் நேரங்களை குறைக்க வேண்டும்.

மாணவர்கள் கிரிட்டிக்கல் திங்கிங், கிரியேட்டிவ் திங்கிங் 2 விஷயங்களை வளர்த்து கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். அரசு பள்ளி மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தால் என்னைப் போன்று ஆயிரம் மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற உயரிய பதவிகளுக்கு செல்வர்.

ஆகையால் நான் படித்த பள்ளியின் முன்னாள் மாணவனாக தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் அரசுப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதி செய்து தர வேண்டும் என கோரிக்கை வைக்கிறேன்” என்று பேசினார்.

### அரசியல் மோதலுக்கு அமலாக்கத்துறையை பயன்படுத்துவதா?

## ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்!

புதுடெல்லி, ஜுலை 22-

அரசியல் சண்டைக்கு அமலாக்கத்துறையை பயன்படுத்துவதா என ஒன்றிய அரசிற்கு உச்சநீதி மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.



மைசூர் நகர்ப்புற மேம்பாட்டு ஆணைய வழக்கில், கர்நாடகா முதலமைச்சர் சித்தராமையாவின் மனைவிக்கு அமலாக்கத்துறை அனுப்பிய சம்மனை, கர்நாடக உயர்நீதி மன்றம் ரத்து செய்தது. இதனை எதிர்த்து, அமலாக்கத்துறை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு, தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மற்றும் வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசியல் சண்டைக்கு அமலாக்கத் துறையை பயன்படுத்துவதா என ஒன்றிய அரசுக்கு நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர். அரசியல் மோதலை தேர்தல் களத்தில் மட்டுமே கடைபிடிக்க ஒன்றிய அரசிற்கு அறிவுறுத்திய நீதிபதிகள், நீதிபதிகளை சீண்ட வேண்டாம் என எச்சரிக்கை விடுத்தனர்.

அத்துடன் அமலாக்கத் துறையின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தும் அவர்கள் உத்தரவிட்டனர்.